1982 மார்ச் 12]

அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட கடனுதவி பெறும் திட்டம்.

*வினா எண் 445—திரு. இரா. தாமரைக்கனி, திரு. கு. ரமணி, திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அரசினர் பள்ளிக் கூடங்களுககு கட்டிடம் கட்டுவதற்கும் கட்டப்பட்ட கட்டிடங்களை விரிவு படுத்துவதற்கும் இன்சூரன்ஸ் கம்பெனி தேசியமயமாக்கப்பட்ட பேங்க் ஆகியவைகளிடம் கடன் வாங்கி கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கென மைய அரசின் திட்டக் குழுவின் அங்கீகாரத்துடன் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து ரூ. 95 கோடி கடன் பெற இம்மாநில அரசு முயன்றது. 1980–85 திட்டக்காலத்தைப் பொறுத்தவரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து பெறககூடிய நிதி வசதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால், பள்ளிக் கட்டிடங்கள கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்புகள் தற்போதைக்கு இல்லை என மைய அரசு திட்டக் குழு தெரிவித்துள்ளது. ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரு தொகையைக் கடனாகப் பெறுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள அரசினர் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்கப்படும்போதே கட்டடங்கள் பற்றி திட்டமிடுவது உண்டா ? அது மட்டுமல்ல, உலக வங்கியின் மூலமாக கடன் பெற்று அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படுகிறபோது அதற்கேற்றாற் போல் கட்டடங்களை கட்டுவது என்பது செய்யப்படாமையின் விளைவு தான் இப்போது இவ்வளவு பெரிய தொகையை நாம் செலவிட வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்போது அப்படிப் பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். எல்.ஐ.சி. நிறுவனத்திடமிருந்து கடன் பெற முயற்சித்ததில் கடன் கிடைக்காத நிலையில் தேசிய வங்கியினிடத்திலே பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கட்டடங் கள் கட்டுமான கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டு மென்று யோசனை சொல்லி இருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்த

முயற்சித்தால் 5 கோடி ரூபாய் கடன் தரலாம் எனவும் சொல்கிறார்கள். இது குறித்த நடவடிக்கையை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் லீட் பேங்காக இருக்கின்ற இண்டியன் ஓவர்சீஸ் பேங்க், எடுத்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை அரசுப் பள்ளிக்கூடங்கள் எந்தவிதமான வசதியும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது—இது ஒரு பகுதி. இன்னொரு பகுதி, கட்டிடங்களே இல்லாமல், வாடகைக் கட்டிடங்களிலும் அல்லது கொட்டகைகளிலும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, மேல்நிலைப் பள்ளிகளில் இன்றைக்கு ஆய்வுக் கூடங்கள் கிடையாது; எந்தவிதமான வசதியும் கிடையாது. அம்மாதிரி இருக்கிற சூழ்நிலைகளில் அரசே, அதற்கு ஒரு கணிசமான தொகை ஒதுக்கி, அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி அரசின் எல்லா உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் கட்டிடங்கள் கிடையாது, ஆய்வுக் கூடங்கள் கிடையாது, ஒரு வசதியும் கிடையாது என்பதைப் போல் அமைந்திருக்கிறது. அது உண்மைக்கு மாறானது. நாமே 400-க்கு மேற்பட்ட ஆய்வுக் கூடங்களை, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே கட்டியிருக்கிறோம். எத்தனையோ கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதுவல்ல பிரச்னை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்தில், ஒவ்வொரு வசதிக்குறைவு இருக்கிறது. சில பள்ளிக்கூடங்களில், ஒன்றுமே இல்லாமலிருக்கிறது. அவற்றையெல்லாம் அரசே சர்வே பண்ணி, அதை ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையிலேதான் எவ்வளவு செலவாகும் என்று சொல்லிக் கொண்டிருப்பதுதான், இந்த ரூ. 95 கோடி. ரூ. 95 கோடி அளவுக்கு நாம் செலவு செய்தால், குறைந்த பட்சம் கட்டிடமே இல்லையென்ற நிலைமையையும், சில இடங்களில் கழிவறைகள் இல்லையென்பது போன்ற இந்த வசதிக்குறைவான நிலைமைகளை எல்லாம் நாம் தவிர்க்க முடியும் என்பதை உணர்ந்துதான் ரூ. 95 கோடி அளவிற்கு ஒரு திட்டத்திற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே எல்.ஐ.சி. நிறுவனத்திடம் நாம் திட்டம் அளிக்கின்றபொழுது, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இவை இடம் பெறவில்லையென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, பாங்குகளிடம் கடன் கேட்டிருக்கிறோம். அவர்கள் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வட்டி விகிதம் போன்ற வேறு சிலவற்றில் அவர்கள் யோசனை சொல்லியிருப்பதால், அவை பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த முயற்சியை அரசே எடுத்துக் கொண்டிருக்கிறது.

1982 மார்ச் 12]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரும் பணக்காரார்கள் எல்லாம் மேல்நாடுகளில் ஏராளமான செல்வத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெரும் செல்வந்தர்களை அரசு அணுகி, வசதியற்ற பள்ளிகளைத் தத்து எடுத்துக்கொள்ளும்படி செய்ய ஆவன செய்யுமா? அது மட்டுமல்லாது, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு பணக்காரார்களை அணுகி ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எதுவும் தெரியாத நிலையில், பாவம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்களானால், அவர்களை என்னிடத்திலே அனுப்பினால், தேவையான அறிவுரைகளைச் சொல்லி பயன்படுத்திக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டிடம்தான் கேட்கிறார்கள். கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது நியாயமான ஒன்று என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வோம். இன்றைக்கு நகர சபைகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்திருப்பதைப் போல், இது ஒரு நியாயமான தேவையாக இருப்பதால், அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு ரூ. 95 கோடி செலவழித்துக் கட்ட வேண்டுமென்பதிலே, ஏதாவது ஒரு சிறப்புத் திட்டமாக வைத்து, இந்த ஆண்டிலோ அல்லது இன்னும் ஓராண்டுக் காலத்திலோ, இரண்டாண்டுக் காலத்திலோ எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலைமை வருமேயானால், ஷிப்ட் சிஸ்டம் என்று சொல்லி, வெளியிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குப் பெரிய உபகாரம் செய்தவர்கள் ஆவோம். அரசாங்கம் அந்த முறையிலே விசேஷ கவனம் செலுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் பல்வேறு முறைகளிலும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சித்து வருகிறோம். ஆகவே, கடன் கிடைத்து விடுமேயானால் அதை வைத்துக் கொண்டு, ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் அல்லது 3 ஆண்டுக் காலத்திலே பெரு முயற்சி எடுத்து—தன்னிறைவுத் திட்டம் என்று குறிப்பிட்டதைப் போல்தான் இந்தத் திட்டம் அமைந்

திருக்கும்—பெரும் தொகையை வைத்துக் கொண்டு, எந்த எந்தப் பள்ளிக்கூடத்திற்கு, என்ன என்ன தேவையோ அதை செய்யக் கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றலாம். ஆகவே, அந்த முயற்சியிலேதான் அரசு இப்பொழுது இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பள்ளிக் கட்டிடங்களே இல்லாதது போல் உறுப்பினர்கள் அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகள், அங்கு வசதிகள் மிகவும் குறைந்த அளவே இருக்கின்றன. இன்னும் கட்டிடங்களே இல்லாமல், குடிசைகளிலே இருப்பதால், பல இடங்களில் தீப்பிடித்து விடுகிறது. அதனால், பல இலட்சங்கள் சேதம் ஏற்படுகின்றது. தீப்பிடித்த கட்டிடங்களைப் புதுப்பிக்க வெகுநாள் ஆகிறது. அதனால், மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவேதான் அதை நான் சொன்னேன். எனவே, அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு ரூ. 95 கோடி என்பது ஒரு பெரிய தொகை அல்ல. மாநில அரசு இன்றைக்கு மதிய உணவிற்காக ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்போகிறது. ஆகவே, இதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயித்து, ஒன்றிரண்டு வருடங்கள் அல்லது 5 வருஷம் என்று நிர்ணயித்து இம்மாதிரி குறைகளை நீக்குவதற்கு அரசு திட்டமிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா பள்ளிக்கூடங்களிலும் வசதியில்லையென்று சொன்னதுபோன்று அந்த வாசகம் வந்ததால்தான் அதை நான் சொன்னேன். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடு இருக்கிறது என்பதைத்தான் இந்த ரூ. 95 கோடி காட்டிக் கொண்டிருக்கிறது. ரூ. 95 கோடி அளவிற்குக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத்தான் அந்தத் தொகையினுடைய அளவு நமக்குக் காட்டுகின்றது. ஆகவேதான் நாம் அந்த அடிப்படையில், உடனடியாக கடனைப் பெற்றிட முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் குறைபாடுகளுக்கு இரண்டு காரணங்கள். ஒன்று, பள்ளிக்கூடங்களைத் திறக்கின்ற முயற்சியிலே ஈடுபட்ட அரசு, அதற்குக் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியிலும் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அதை எடுக்கவில்லை. அடுத்தது, கட்டிடம் கட்டித் தருகிறோம் என்று தெரிவித்த அந்தக் கட்டிடக் குழுவினர் அந்த முயற்சியிலே ஈடுபட்டு, குறைந்தபட்சக் கட்டிடத்தைக் கட்டித் தரவில்லை. ஆனால், நாம் இப்பொழுது யார், ஏன் செய்யவில்லையென்கின்ற குறைபாடுகளைச் சொல்லிக்கொண்டிருந்தால் காரியம் நடைபெறாது. ஆகவேதான் அரசு இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.